# பத்திரிக்கைச் செய்தி.

பயிர் உற்பத்தி இழப்பிலிருந்து விவசாயிகளை பாதுகாத்தல், உணவு பாதுகாப்பை உறுதி செய்தல், மாற்றுப்பயிர் சாகுபடியை ஊக்குவித்தல் போன்ற நோக்கங்களோடு ‘‘பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம்’’ தமிழகத்தில் உள்ள அரியலூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இயற்கை சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கான பயிர் இழப்பீட்டுத் தொகையை விவசாயிகளுக்கு விரைந்து வழங்குவதோடு விதைப்பு பொய்த்தாலும், நடவு செய்ய இயலாத நிலை ஏற்பட்டாலும், அறுவடைக்குப்பிந்திய இழப்பு ஏற்பட்டாலும், பகுதிசார்ந்த இயற்கை இடர்பாடுகளான புயல், ஆலங்கட்டி மழை, நிலச்சரிவு, பருவம் தவறிய மழை, வயல்களில் வெள்ள நீர் தேக்கம் மற்றும் அடைபருவகால இடர்பாடுகளால் இழப்புகள் ஏற்பட்டாலும் இழப்பீடு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. வேளாண் பயிர்களைப் போல, தோட்டக்கலை பயிர்களுக்கும் அரியலூர் மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட கிராமங்களில், அறிவிக்கை செய்யப்பட்ட தோட்டக்கலைபயிர்களான மரவள்ளி, வெங்காயம், மஞ்சள் மற்றும் வாழை ஆகியவற்றிற்கு வருவாய் கிராம அளவில் காப்பீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் காப்பீடு செய்யும் மொத்த காப்பீட்டுத் தொகையில் விவசாயிகள் **5%** மட்டுமே செலுத்தினால் போதும். மீதமுள்ள காப்பீட்டுத் தொகையை மத்திய மாநில அரசுகளே ஏற்கின்றன. இத்திட்டத்தின் கீழ் மரவள்ளி, வெங்காயம், மஞ்சள் மற்றும் வாழை ஆகிய பயிர்களுக்கு காப்பீடு செய்ய கடைசி நாள் **01.10.2018** ஆகும். விவசாயிகள் நடப்பு காரிப் பருவத்தில் பயிர் செய்த மேற்கண்ட பயிர்களுக்குக் காப்பீடு செய்ய அதற்குரிய பிரிமியத் தொகை, அடங்கல், ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்கு விவரம் ஆகியவற்றுடன் அருகிலுள்ள தொடக்க கூட்டுறவு வேளாண்மை வங்கிகள், தனியார், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் பொது சேவை மையங்களை அணுகி விரைந்து காப்பீடு செய்து பயன்பெறுமாறு தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் **பி.அன்புராஜன்** அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.